Koviloor Digital Library

உ

ஓம் மஹா கணபதே நமஹ:

இரசமணி விநாயகர்

RASAMANI VINAYAGAR



POOJA MALAR

ACC No 34009
3-2
Q1-H173

பூஜை மலர்

Koviloor Digital Library

உ

ஓம் மஹா கணபதே நமஹ:



காப்பு

வினைகளையும் முதற் தெய்வம்
விநாயகனின் திருப்பார்வை
அணைகளென நம்மைக்காக்கும்
அவரேதான் நாடும் காப்பு நமக்கு



காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம்
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித் தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே பணி துதி



Koviloor Digital Library

3-21




உ
ஓம் மஹா கணபதியே நமஹ :





" 1008 "
இரசமணி விநாயகர் சங்கமிக்கும்





1-1-2008 - ம் ஆண்டு
மஹா கணபதி ஹோம விழா சிறப்பு மலர்

இராஜபாளையம்.

Koviloor Digital Library



இரசமணி விநாயகர்

முன்னுரை:

இரசம் என்பது சிவனின் உயிர் அணு. இந்த இரசம் எவருக்கும் கட்டுப்படாத ஒரு திரவப்பொருள். இதை கட்டி உருவம் செய்வது என்பது சாதாரண காரியம் அல்ல . இது அனைவராலும் முடியாத காரியம். அப்படிப்பட்ட இரசத்தை நெருப்புக்கு கட்டுப்படுத்துவது மூலிகைக்கும், உப்புக்கும் தான் அந்த சக்தி உண்டு.

இரசம் என்பது திடப்பொருள் அல்ல அது திரவப்பொருள். அது திரவமாக இருக்கம் பொழுது எதனுடனும் சேராது. எதையும் ஈர்க்க முடியாது. இதை திடப்பொருளாக செய்து வழிபட்டால் இதற்கு காந்த சக்தி அதிகம் உண்டு.

இரசமணி விநாயகரை நாம் வணங்கும் போது, அதிலிருந்து வெளிப்படும் காந்த சக்தி நம் உடலுக்கு கண்பார்வை மூலம் நெற்றிக்கண் வழியாக (இரு புருவங்களுக்கு மையத்தில் இருப்பது) நம் உடலுக்கு வந்து சேரும்பொழுது நம் உடலில் ஏற்படும் தீய சக்திகள் தீய எண்ணங்கள் மாறி நல்ல எண்ணங்கள் ஏற்பட்டு மூளைக்கு புத்துயிர் அளித்து ஆன்மாவிற்கு பலம் சேர்க்கிறது.

இதனால் நாம் எந்த ஒரு செயலையும் தெளிவாக சிந்தித்து வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும். மனது ஒருமைப்பட்டு சஞ்சலங்கள் விலகினால் நாம் எண்ணிய நல்ல காரியம் விரைவாக கைகூடும். இது ஆன்றோர் வாக்கு.

Koviloor Digital Library

சிவலிங்க பூஜாவிதி

கேளப்பா புலஸ்தியனே ரசத்திற்போதங்
கெடிபடாச் சிவனைப் போல் வார்த்துக் கொண்டு
தாளப்பா பூஜைசெய்யக் கைலாச போதந்
தப்பாமற் சதகோடி காலமாகும்
தேளப்பா கொட்டினதோர் விஷத்தைப் போலத்
தேடரிது ரசத்தினுட குளிகை வேகம்
வாளப்பா புலதியனே நாவினுள்ளே
வாயடக்கஞ் செய்து கொள்ள யோகமாச்சே - அகஸ்தியர்.

போகர் கற்பகம் 300

கெடியான குளிகைகளைப் பண்ணிப்பண்ணி
தட்டவே சாரணையைத் தீர்த்த பின்பு
சாங்கமாய்ச் சூதமெல்லாங் குகையில் வைத்து
எட்டவே குளிகைதனை யெடுத்துக் கொண்டு
ஏற்றாமாங் குளிகையிட்டுக் கெவுனமாகி
உட்டவே ரோமபுரிக் கடலில் வந்து
உதுட்டான சித்தனைத்தான் கண்டிட்டேனே ....
தொண்டுபட்டுச் சிவனுக்கு சேதி சொல்லு
சொரூபமாங் குளிகையொன்று சூட்டினேனே !

சூட்டியே கைகொடுத்து வகையுஞ் சொல்லிச்
சூதத்தின் திறமையைத்தான் சோதித்துக் காட்டி
ஓட்டியே ஒருவருக்குங் கொடாதேயென்று
உண்மை சொல்லிக் குடுக்கைதனில் சூதம் வாங்கி
ஆட்டியே அவிடம் விட்டு அனுப்பிக் கொண்டு
அய்யர் நந்தி பதம்பார்க்க அண்டத்தேறி
நாட்டியே நூற்றறுபதா மண்டபத்தில்
நந்தியடி தனைப்போற்றி நாடினேனே ....

காணவே யிந்தமுறை செய்வதாரு
கருத்தாகச் சாஸ்திரத்தை நம்பினோர்கள்
பூணவே சிவயோகி ரிஷிகள் சித்தர்
புகழாகத் தரிக்கலாங் குளிகை தன்னை
வாணவே வாசிகண்ட ஞானிக்குத்தான்
வாமத்தே நின்றுரைத்த பூசையோர்கள்
வேணவே வெகுகாமி பெண்ணாசை கொண்டோன்
மிகையாகி நோயெய்தி மாள்வான் தானே.


Koviloor Digital Library

கேளாதே யாரையுந்தான் வயிரமுண்ணு
கெட்டியா முடலிறுகி நரையோ மாறும்
புகழாக குளிகை தன்னை வைத்தே
உருவஞ்செய்தே பூஜை பண்ணே !
தாளாதே நோய்களெல்லாந் தலை கெட்டோடும்
தங்கம் போல் தேகமெல்லாஞ் சிவப்பதாகும்.

ஆதாரம். போகர் கற்பம் 300

மேற்கண்ட கவியில் உள்ள சித்தர்களின் வாக்குப்படி இந்த உலக மக்கள் அனைவருக்கும் பலன் கிடைக்க வேண்டும் என்ற தீராத சிந்தனையின் விளைவால் எனது எண்ணத்தில் உதித்த யோசனையின்பால் பல ஏடுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் தேடி விபரம் சேகரித்து சித்தர்கள் செய்து உபயோகித்த இரசமணியை செய்து அதன் பிறகு விநாயகர் விக்ரஹம் செய்து அதன் பயன்கள் நாங்கள் அடைந்ததினால் அதன் பயன்களை உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க செய்ய வேண்டும் என் ற எண்ணம் தோன்றியது. எனவே அதன் அடிப்படையில் உருவாக்கிய இரசமணி விநாயகர் விக்ரஹத்தை பக்த அன்பர்கள் அனைவரும் வணங்கி சகல ஐஸ்வரியங்களும் பெற்று வழமோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு,



ஆக்கமும் உணர்வும்
''இரசமணி'' M. மோகன்
இராஜபாளையம்.
போன் : 04563 - 320172
செல் : 98421 - 35662
99428 - 07597

Koviloor Digital Library



தினமும் 5 முறை படிக்கவும்

காயத்திரி மந்திரம்

ஓம் ஏக தந்தாய வித்மஹே !
வக்ர துண்டாய தீ மஹி !
தன் னோ தந்தி ப்ர சோதயாத் !

கணபதி மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் க்லௌம் கம்
கணபதயே வரவரத சர்வ ஜெனம்மே
வசம் ஆனய ஸ்வாஹா !

விநாயகர் துதி

(தினமும் 1 முறை படிக்கவும்)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

Koviloor Digital Library



அருள்மிகு விநாயகர் 16 போற்றிகள்

தினமும் 1 முறை படிக்கவும்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி !
2. ஓம் ஆதார கணபதி போற்றி !
3. ஓம் ஆரண முதலே போற்றி !
4. ஓம் ஆனை முகத்தனே போற்றி !
5. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி !
6. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி !
7. ஓம் ஐந்து கரத்தனே போற்றி !
8. ஓம் ஓமெனும் பொருளே போற்றி !
9. ஓம் கற்பக விநாயகா போற்றி !
10. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி !
11. ஓம் சித்தி விநாயகா போற்றி !
12. ஓம் தத்துவ முதலே போற்றி !
13. ஓம் பரம தயாளா போற்றி !
14. ஓம் முக்கட் கரும்பே போற்றி !
15. ஓம் வெற்றித் திருவே போற்றி !
16. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி !

Koviloor Digital Library



வெள்ளிக்கிழமை தோறும் சொல்லி வரவும்

அருள்மிகு விநாயகர் 108 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி !
2. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி !
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி !
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி !
5. ஓம் அறக் கருணையாய் போற்றி !
6. ஓம் அறிவானந்த உருவே போற்றி !
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி !
8. ஓம் ஆதார கணபதி போற்றி !
9. ஓம் ஆரண முதலே போற்றி !
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி !
11. ஓம் இடர்தனைக் களைவாய் போற்றி !
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி !
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி !
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி !
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி !
16. ஓம் ஈசனார் மகனே போற்றி !
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி !
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி !
19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி !
20. ஓம் உய்வருள் பெருமாள் போற்றி !
21. ஓம் உலகமெல்லாம் ஆனாய் போற்றி !
22. ஓம் உலவாத இன்பமே போற்றி !
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி !
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி !
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி !

Kovilpur Digital Library

26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி !
27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி !
28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி !
29. ஓம் எழில்வளர் ஜோதியே போற்றி !
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி !
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி !
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி !
33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி !
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி !
35. ஓம் ஓமெனும் பொருளே போற்றி !
36. ஓம் கங்கை வேணியா போற்றி !
37. ஓம் கணநாத கற்பகா போற்றி !
38. ஓம் கணபதிக் களிறே போற்றி !
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி !
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி !
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி !
42. ஓம் கற்பக விநாயகா போற்றி !
43. ஓம் காங்கேயன் தமையா போற்றி !
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி !
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி !
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி !
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி !
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி !
49. ஓம் கைப்போதகமே போற்றி !
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி !
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி !
52. ஓம் சந்திர சேகரா போற்றி !

Koviloor Digital Library

53. ஓம் சித்தித் தேனே போற்றி !
54. ஓம் சித்தி விநாயகா போற்றி !
55. ஓம் சித்தி புத்தி மணாளா போற்றி !
56. ஓம் சிவ கணபதியே போற்றி !
57. ஓம் சீர்பெற அருள்வாய் போற்றி !
58. ஓம் செல்வக் கணேசா போற்றி !
59. ஓம் செல்வமருள்வாய் போற்றி !
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி !
61. ஓம் சேமம் தருவாய் போற்றி !
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி !
63. ஓம் தத்துவ முதலே போற்றி !
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி !
65. ஓம் தந்தி முகனே போற்றி !
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி !
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி !
68. ஓம் தற்பர விநாயகா போற்றி !
69. ஓம் தாரக மறையே போற்றி !
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி !
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி !
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி !
73. ஓம் நந்திமகனே போற்றி !
74. ஓம் நாத முடிவே போற்றி !
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி !
76. ஓம் நான்ற வாயினை போற்றி !
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி !
78. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி !
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி !

Koviloor Digital Library

80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி !
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி !
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி !
83. ஓம் பரம தயாளா போற்றி !
84. ஓம் பரிதிபோல் மதிதருவாய் போற்றி !
85. ஓம் பாதிமதி சூடி போற்றி !
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி !
87. ஓம் பிரணவக் களிறே போற்றி !
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி !
89. ஓம் புண்ணிய மூர்த்தியே போற்றி !
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி !
91. ஓம் பையரவசைத்தாய் போற்றி !
92. ஓம் போத நாயகா போற்றி !
93. ஓம் போத வடிவே போற்றி !
94. ஓம் மணிநீல கண்டா போற்றி !
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி !
96. ஓம் மாசிலா மணியே போற்றி !
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி !
98. ஓம் முடியா முதலே போற்றி !
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி !
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி !
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி !
102. ஓம் யாவு மகானாய் போற்றி !
103. ஓம் யோகியர் தலைவா போற்றி !
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி !
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி !
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி !
107. ஓம் வெற்றித் திருவே போற்றி !
108. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி !

Koviloor Digital Library



இரசமணி விநாயகரை வழிபடும் முறைகள்

இரசமணி விநாயகரை வீடுகளில் பூஜை அறை அல்லது குத்துவிளக்கு ஏற்றும் இடத்தில் தான் வைத்து வணங்க வேண்டும். காயத்திரி, கணபதி மந்திரம் 5 முறை கூறி வரவும். வெள்ளிக்கிழமை தோறும் தண்ணீர் விட்டு கழுவி மஞ்சள் குங்குமம் இட்டு அருகம்புல் கொண்டு அர்ச்சித்து வர வேண்டும். முடிந்தால் பால் அபிஷேகமும், மஞ்சள் அபிஷேகமும் செய்வது நல்லது. அபிஷேகம் செய்ய இயலாத அன்பர்கள் தினந்தோறும் சுலோகம் கூறி வர நல்ல பலன்கள் உடனே கிடைக்கும்.

அபிஷேகம் செய்யும் அன்பர்கள் கவனமாக கை தவறவிடாமல் செய்ய வேண்டும். ஏனென்றால் கை தவறவிட்டால் உடையும் வாய்ப்பு உள்ளது. ஆகவே கவனமாக கையாளவும்.

சில நேரங்களில் நாம் வெளியூர் செல்லும் வாய்ப்பு நேரிடும் வர சில தினங்கள் ஆகலாம். அந்த தினங்களில் இரசமணி விநாயகரை வணங்க முடியவில்லையே வேறு ஏதாவது தீங்கு நேர்ந்து விடுமோ என்ற கவலை வேண்டாம். நீங்கள் எங்கு சென்றாலும் அங்கிருந்து கொண்டு மனதில் நினைத்து வணங்கினாலும் போதும். அதையும் ஏற்றுக்கொள்வார் நம் இரசமணி விநாயகர் மேலும் குளித்தவுடன் வணங்குவது மிகவும் நல்லது.

Koviloor Digital Library



இரசமணி விநாயகரின் மகத்துவம்

இந்த இரசமணி விநாயகரை ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்தில் வைத்து தினந்தோறும் பூஜித்து வணங்கி வந்தால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தீரும், தீய சக்திகள் நம்மை அண்டாது. மனதில் அமைதி கிடைக்கும். நினைத்த காரியம் கைகூடும். தொழில் நடைபெறும் இடங்களிலும், வியாபாரஸ்தலங்களிலும் வைத்து வழிபடுவதால் தொழில் முன்னேற்றம் அடையும். வியாபாரம் பெருகி நல்ல லாபம் பெற வைக்கிறார் இரசமணி விநாயகர்.

நீண்ட நாட்களாக திருமண தடை இருந்து வந்தால் விநாயகரை தினந்தோறும் அருகம்புல் கொண்டு அர்ச்சனை செய்து வர விரைவில் திருமணம் நடைபெறும்.

குழந்தை பாக்கியம் இல்லை என்று ஏங்கி வருத்தப் பட்டுக் கொண்டிருக்கும் அன்பர்கள் தினந்தோறும் காலையில் குளித்து முடித்து இரசமணி விநாயகர் முன் அமர்ந்து விநாயகர் போற்றியையும், சுலோகங்களையும் கூறி அருகம்புல் கொண்டு நம்பிக்கையுடன் அர்ச்சனை செய்து வர தும்பிக்கையுடையான் நம்பிக்கையுடன் அருள்பாலித்து குழந்தை பாக்கியம் கிடைக்க செய்கிறார். வெகு நாட்களாக இருக்கும் தீராத நோய் உள்ளவர்கள் அர்ச்சனை செய்த அருகம்புல்லை காயவைத்து பொடி செய்து பாலில் கலந்து தினந்தோறும் அருந்தி வர தீராத அனைத்து வகை நோய்களும் குணமாகும். மேலும் இந்த இரசமணி விநாயகரை நாங்கள் பிரத்யோக பூஜை செய்து உங்களுக்கு வழங்குவதால் சகல சௌபாக்கியங்களுடன் பலன் உடனே கிடைக்கும்.

Koviloor Digital Library

இரசமணி விநாயகரின் தனிச்சிறப்பு இரசமணி விநாயகரை வழிபடுவதால் கிடைக்கும் நற்பலன்கள்

தொழில் முன்னேற்றம் அடையும்
தீராத நோய்கள் தீரும்
மன அமைதி கிடைக்கும்
குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள் நீங்கும்.
குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்
குழந்தைகள் படிப்பு நன்றாக வரும்.
திருமண தடை நீங்கும்
சுப காரியம் கை கூடும்
வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஏற்படும்.
குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை செல்வம் கிட்டும்
வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும்.

ஆகவே இந்த இரசமணி விநாயகரை நம்பிக்கையுடன் பக்தியுடன் வணங்கி அனைத்து பலன்களையும் பெற்று வளமுடன் வாழ பக்த அன்பர்களை மிக பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம்.

இந்த இரசமணி விநாயகரை நாங்களே பிரத்யோக பூஜை செய்து அதன் பலன்களை அடைந்ததனால் அதை இந்த உலக மக்களுக்கு கிடைக்க செய்ய வேண்டும் என்று ஆன்மீக தெய்வ வழிபாடு நோக்கத்தோடு பல சிரமங்களுக்கு மத்தியில் இதை உருவாக்கி செய்து வருகிறோம்.

புராண காலத்தில் அகஸ்தியரும், சித்தர்களில் ஒருவரான போகரும் இரசமணி குளிகை செய்து தான் நினைத்த காரியத்தை சாதித்து வந்தார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் இரசமணி செய்து அதன் பின் விநாயகர் விக்ரஹம் செய்து அதை பக்த அன்பர்களுக்கு வழங்கி வருகிறோம். ஆகையால் நாங்கள் அடைந்த பயன்களையும், பலன்களையும் நீங்களும் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் இப்பணியை செய்து வருகிறோம். ஆகவே இந்த இரசமணி விநாயகரை வணங்கி வழிபட்டு அதன் பயன்பெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

Koviloor Digital Library

இரசமணியின் பயன்கள்

பக்த அன்பர்கள் ஆண்கள் இரசமணியை கழுத்தில் அல்லது இடுப்பில் அணிந்து கொள்ளலாம் இதனால் உடலில் உள்ள அதிகப்படியான உஷ்ணம் குறைக்கப்படும். உடல் சோர்வு நீங்கும் புத்துணர்ச்சி கிடைக்கும் ஞாபக சக்தி குறை உள்ளவர்களுக்கு ஞாபக சக்தி தூண்டப்படும். பிரஷர் உள்ளவர்கள் தினமும் 10 நிமிடம் கையில் வைத்து தியானிக்க பிரஷர் குறைந்து நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும். மனச் சோர்வு நீங்கி மூலைக்கு புது தெம்பு கிடைக்கப்பெறும். விஷ ஜந்துக்கள் தீண்டாது. பில்லி சூன்யம் ஏவல் ஆகிய தீவினைகளிலிருந்து நிச்சயம் நம்மை காக்கும்.

பெண்கள் கழுத்தில் அணிய இயலாது

பெண்கள் மட்டும் கழுத்தில் அணிய இயலாது காரணம். கழுத்தில் தங்க ஆபரணங்கள் செயின் இருப்பதால் அதன்மீது இரசமணி பட்டால் அது வெண்மை நிறமாக மாறி விடும். ஆகையால் பெண்கள் இடுப்பில் அணிந்து கொள்ளலாம்.

தியான இரசமணி

தியான இரசமணியை தினந்தோறும் அரைமணி நேரம் வலது உள்ளங்கையில் வைத்து கையை மூடியபடி அமைதியாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதனால் நம் உடலில் இரத்த ஓட்டம் சீராகவும் மன அழுத்தம் இல்லாமலும் மனச் சோர்வு நீங்கி புத்துணர்வு கிடைக்கும். மேலும் அவ்வாறு இருப்பதனால் மன குழப்பங்கள் நீங்கி மனத்தூய்மையுடன் மன அமைதி கிடைக்கப்பெறும். தினந்தோறும் தியானம் செய்வதால் நம் மனது ஒருநிலைப்பட்டு புதிய சிந்தனையுடன் தெளிவாக ஒவ்வொரு காரியங்களும் வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும். ஆகவே ஒவ்வொருவரும் தினந்தோறும் தியான பயிற்சி மேற்கொண்டு மன அமைதியுடனும தூய உள்ளத்துடனும் வாழ வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தியானம் முடிந்தவுடன் இரசமணியை பூஜை அறையில் வைத்துவிட வேண்டும்.

தியான பயிற்ச்சியால் மன குழப்பங்கள் நீங்கி மன அமைதி கிடைக்கும் என்பதில் அய்யமில்லை.

Koviloor Digital Library

இரசமணி முருகன் விக்ரஹம்



இரசமணி முருகன் விக்ரஹத்தை பூஜையில் வைத்து தினந்தோறும் வணங்கி வருவதால் உடல் ஆரோக்கியத்துடன் நமக்கு ஏற்படும் இன்னல்களில் இருந்து விடுவிக்கிறார். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி நல்உறவு ஏற்பட வைக்கிறார். காரிய சித்தி பெற வைக்கிறார். தினந்தோறும் முருகனை வழிபடுவதால் தீராத வினைகளை தீர்த்துவைக்கிறார். முருக பக்தர்கள் அனைவரும் தங்கள் பூஜையறையில் வைத்து இரசமணி முருகனை வழிபட்டுவந்தால் வீடு, மனை வாங்கிடவும் வியாபாரம் முன்னேற்றம், தொழில் அபிவிருத்தி அமையப்பெரும். கடன் தொல்லைகள் நீங்கி மன அமைதி பெற்று நலமுடன் வாழ வழி கிடைக்கும். செல்வ வளம் பெற்று தேக ஆரோக்கியத்துடன் வாழவும் முருகன் அருள்புரிவார்.


இரசமணி முருகன் 21 போற்றிகள்

1. ஆதி மூல முருகா போற்றி
2. ஆதி தேவ முருகா போற்றி
3. ஞானபால முருகா போற்றி
4. ஞான கான தேவா போற்றி
5. கோயில் நாடி வந்தேன் முருகா போற்றி
6. குறைகள் தீர்க்க வருவாய் முருகா போற்றி
7. உன் மலையை நாடி வந்தேன் முருகா போற்றி
8. மனமிரங்கி வருவாய் முருகா போற்றி
9. மயிலழைக்க வந்தேன் முருகா போற்றி
10. மன மகிழ்ந்து வருவாய் முருகா போற்றி

Koviloor Digital Library

11. உன் கொடி யழைக்க வந்தேன் முருகா போற்றி
12. குணமறிந்து வருவாய் முருகா போற்றி
13. என் வினைகள் நீங்க வந்தேன் முருகா போற்றி
14. வேலெடுத்து வருவாய் முருகா போற்றி
15. அன்னை தந்தையானாய் முருகா போற்றி
16. அறிய செல்வமானாய் முருகா போற்றி
17. செந்தில் வாழும் முருகா போற்றி
18. திருப்பழனி சுவாமி மலை முருகா போற்றி
19. என்னை யாளும் எம்பெருமான் முருகா போற்றி
20. உன்னை யென்றும் மறவேன் முருகா போற்றி
21. சரணம் சரணம் சரணம் சரவண பவ

– ஓம் முருகா போற்றி போற்றி!



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த

இரதபந்தம்

தினமும் படித்து வர வாகன விபத்துக்கள் தடுக்கப்படும்

இருள்பொரு தாவம் பலச் சித்தென்னு முருகா
நீடிரு விண்ணோர் தேடுமருந்தே மாண் பொருவாச் சீர்
தேசு தருஞ் செந்தி நறுந்தீர்த்த விரலோங்கு சிதவா
சிறந்த மாவின் பருள்

மேலே உள்ள இரத பந்த கவியை தினந்தோறும் பக்தர்கள் கூறி வருவதனால் நாம் வெளியே வாகனங்களில் செல்ல நேரிடும் போது அது சமயம் விபத்துக்கள் ஏதும் நேராமல் நம்மை காக்கும்.

Koviloor Digital Library

சஸ்திர பந்தம்

வாலவே தாந்தாபா வாசம் போ குத்தன்பா
மாலை பூ ணேமதிர மால்வரீதே
மாபாசம் போக மதிதேசார் மாபூதம்
வா பாதந் தாவேல வா.

மயூர பந்தம்

வரதந திபநக ரசுமுக வொருகுக வறிதுத புவிரி விதி
மரகத வரிபர மதுகளி லசலவி மலமழ வெனலிரிய
மரபுறு குறுமுனி வருதிம யலசர மதிவரி விபுத குரு
சுரபதி நவரச பரததி நகரம துகமழ முனி வருதி



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய குமாரஸ் தவம்

ஓம்	சண்முக	பதயே	நமோ	நம :
ஓம்	சண்மத	பதயே	நமோ	நம :
ஓம்	ஷட்க்ரீவ	பதயே	நமோ	நம :
ஓம்	விட்க்ரீட	பதயே	நமோ	நம :
ஓம்	ஷட்கோண	பதயே	நமோ	நம :
ஓம்	ஷட்கோச	பதயே	நமோ	நம :
ஓம்	நவநிதி	பதயே	நமோ	நம :
ஓம்	சுபநிதி	பதயே	நமோ	நம :
ஓம்	நரபதி	பதயே	நமோ	நம :

Koviloor Digital Library

ஓம்	ஸரபதி	பதயே	நமோ	நம :
ஓம்	நடச்சிவ	பதயே	நமோ	நம :
ஓம்	சட்ஸர	பதயே	நமோ	நம :
ஓம்	கவிராஜ	பதயே	நமோ	நம :
ஓம்	தவராஜ	பதயே	நமோ	நம :
ஓம்	இஹபர	பதயே	நமோ	நம :
ஓம்	புகழ்முநி	பதயே	நமோ	நம :
ஓம்	ஜய ஜய	பதயே	நமோ	நம :
ஓம்	நயநய	பதயே	நமோ	நம :
ஓம்	மஞ்சுள	பதயே	நமோ	நம :
ஓம்	குஞ்சர	பதயே	நமோ	நம :
ஓம்	வல்லீ	பதயே	நமோ	நம :
ஓம்	மல்ல	பதயே	நமோ	நம :
ஓம்	அஸ்த்ர	பதயே	நமோ	நம :
ஓம்	சஸ்த்ர	பதயே	நமோ	நம :
ஓம்	சஷ்டி	பதயே	நமோ	நம :
ஓம்	இஷ்டி	பதயே	நமோ	நம :
ஓம்	அபேத	பதயே	நமோ	நம :
ஓம்	ஸிபோத	பதயே	நமோ	நம :
ஓம்	(வ்) வியூஹ	பதயே	நமோ	நம :
ஓம்	மயுர	பதயே	நமோ	நம :
ஓம்	பூத	பதயே	நமோ	நம :
ஓம்	வேத	பதயே	நமோ	நம :
ஓம்	புராண	பதயே	நமோ	நம :
ஓம்	(ப்) பிராண	பதயே	நமோ	நம :
ஓம்	பக்த	பதயே	நமோ	நம :
ஓம்	முக்த	பதயே	நமோ	நம :
ஓம்	அகார	பதயே	நமோ	நம :
ஓம்	உகார	பதயே	நமோ	நம :
ஓம்	மகார	பதயே	நமோ	நம :
ஓம்	விகாச	பதயே	நமோ	நம :
ஓம்	ஆதி	பதயே	நமோ	நம :
ஓம்	பூதி	பதயே	நமோ	நம :
ஓம்	அமார	பதயே	நமோ	நம :
ஓம்	குமார	பதயே	நமோ	நம :
ஓம்	குமார	பதயே	நமோ	நம :
ஓம்	குமார	பதயே	நமோ	நம :

Koviloor Digital Library

இரசமணி சிவலிங்கம் விக்ரஹம்



இரசமணி சிவலிங்கம் விக்ரஹத்தை தினமும் வணங்கும் பொழுது சிவபஞ்சாட்சர சுலோகம் கூறி வர நற்பலன்கள் கிடைப்பதோடு மன அமைதியும் நற்பலன்கள் கிடைப்பதோடு மன அமைதியும் நோய் நொடிகள் பிணிகள் நீங்கி உடல் ஆரோக்கியமாகவும் மன அழுத்தம் இல்லாமலும் காணப்படும். அதேபோல் ஓம் நமச்சிவாய என்னும் மந்திரத்தை தினமும் 108 முறை கூறிவர நற்பலன்கள் கிடைப்பதோடு சிவபெருமானின் அனுகிரஹம் கண்டிப்பாக நமக்கு கிடைக்கும்.

தினமும் ஐந்து முறை சொல்லி வரவும்.

சிவ பஞ்சாட்சர சுலோகம்

சிவாய நம
யநம சிவ
மசி வய ந
வய நம சி
நம சிவாய

இரசமணி சிவலிங்கம் விக்ரஹம்

சிவலிங்கம் விக்ரஹத்தை வைத்து தினந்தோறும் பூஜை செய்து சிவபஞ்சாட்சர சுலோகங்கள் கூறி வர அஷ்டமா சித்திகளும் பெறப்பட்டு உன்னதமான நிலையை அடையலாம். 40 வயதுக்கு மேல் உள்ளவர்கள் சிவபூஜை செய்வது நல்லது. சிவபூஜை செய்யும் பொழுது கட்டாயமாக கையில் இரசமணி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் பஞ்சபூதங்களினால் ஏற்படும் இடையூறுகளில் இருந்து நம்மை காக்கும்.

Koviloor Digital Library

திருமூலர் திருமந்திரம்

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாருமில்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி
தவள சடைமுடி தாமரையானே !

பிரதோஷ ஸ்தோத்திரம்

ஓம்	பவாய	நம :
ஓம்	ருத்ராய	நம :
ஓம்	மிருபாய	நம :
ஓம்	ஈசனாய	நம :
ஓம்	சம்பவே	நம :
ஓம்	சர்வாய	நம :
ஓம்	ஸ்தாணவே	நம :
ஓம்	உக்ராய	நம :
ஓம்	பார்க்காய	நம :
ஓம்	பரமேஸ்வராய	நம :
ஓம்	மஹா தேவாய	நம :

சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கொடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன்பெய்கழல்கள் வெல்க
பிறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்கிவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி !
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி !
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி போற்றி !!

Koviloor Digital Library

இரசமணி நந்தி



நந்தியை வணங்குவோர்க்கு

நந்திஎம் பெருமாள் தன்னை
நாடோறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும் !
சிறப்புறு மக்கள் சேர்வர் !
இந்திர போகம் கிட்டும் !
இணையிலா வாழ்வு தானே !

நந்தியே உனைத்துதித்தேன்

கந்தனின் தந்தையை தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

ஒன்பது கோள்களுக்கும் உயரியபலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்
சிந்தனை வளம்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியை உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்

Koviloor Digital Library


மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா !
நாளும் நான் உனை துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல்வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சடனாய் உனையடைந்தேன் தயங்காத எமைக் காப்பாய்.



இரசமணி சிவலிங்கம்










இரசமணி முருகன்

இரசமணி விநாயகர்







Koviloor Digital Library

நட்சத்திரம், வழிபட வேண்டிய கிரக மூர்த்திகள் :

வ. எண்	ஜென்ம நட்சத்திரம்	வணங்க வேண்டிய கிரகம்	தலம் உள்ள ஊர்	தலம் வழிபட வேண்டிய மூர்த்திகள்
1.	அஸ்வினி	சனி	திருநள்ளார்	சனீஸ்வரர்
2.	பரணி	ராகு	திருவாலங்காடு	மகாகாளி
3.	கிருத்திகை	ராகு	திருநாலம்	ஆதிசேஷன்
4.	ரோகிணி	ராகு	திருநாகேஸ்வரம்	நாகநாதசுவாமி
5.	மிருகசீரிடம்	ராகு	கதிராமங்கலம்	துர்காதேவி
6.	திருவாதிரை	சனி	திருகொள்ளிடைக்காடு	சனீஸ்வரர், தட்சிணாமூர்த்தி
7.	புனர்பூசம்	குரு	ஆலங்குடி	தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி)
8.	பூசம்	ராகு	குச்சானூர்	சனீஸ்வரர்
9.	ஆயில்யம்	ராகு	திருப்பரங்குன்றம்	சனீஸ்வரர்
10.	மகம்	ராகு	தில்லை சிதம்பரம்	தில்லை காளி
11.	பூரம்	ராகு	திருமணஞ்சேரி	ராகுபகவான்
12.	உத்திரம்	ராகு	மூவாணூர்	வஞ்சியம்மன்
13.	அஸ்தம்	ராகு	திருவாரூர்	ராஜதுர்க்கை
14.	சித்திரை	ராகு	திருவாரூர்	ராஜதுர்க்கை
15.	சுவாதி	சனி	திருவானைக்கால்	சனீஸ்வரர்
16.	விசாகம்	சனீஸ்வரர்	சோழவந்தான்	சனீஸ்வரர்
17.	அனுசம்	ராகு	திருவிடை மருதூர்	முகாம்பிகை
18.	கேட்டை	ராகு	பல்லடம்	அங்காளபரமேஸ்வரி
19.	மூலம்	குரு	மதுரை	தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி)
20.	பூராடம்	குரு	திருநாவலூர்	தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி)
21.	உத்திராடம்	ராகு	தர்மபுரம்	துர்காதேவி
22.	திருவோணம்	ராகு	தெத்துப்பட்டி	ராஜகாளியம்மன்
23.	அவிட்டம்	சனி, ராகு	கொடுமுடி	சனீஸ்வரர், நாகராஜன்
24.	சதயம்	சனி, ராகு	திருசெங்கோடு	சனீஸ்வரர், நாகராஜன்
25.	பூரட்டாதி	ராகு, கேது	காஞ்சிபுரம்	ஆதிசேஷன், சித்திரகுப்தன்
26.	உத்திரட்டாதி	சனி, குரு	திருவையாறு	சனீஸ்வரர், தட்சிணாமூர்த்தி
27.	ரேவதி	சனி, குரு	ஓமாம்புலியூர்	சனீஸ்வரர், தட்சிணாமூர்த்தி

வாழ்க்கையில் ஒரு முறையாவது அவரவர் நட்சத்திரத்திற்குரிய கோவிலுக்கு செல்லுவது மிகவும் நன்று.

Koviloor Digital Library

முக்கிய குறிப்பு :

இரசமணி விநாயகர், இரசமணி ஆகியவை வாங்கும் பக்த அன்பர்கள் ஒவ்வொருவரும் முக்கியமான கவனிக்க வேண்டியவை.

இரசமணி விநாயகரோ, இரசமணியோ தங்க ஆபரணங்கள் மீதோ, வெள்ளி தட்டின் மீதோ படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தங்க செயின், மோதிரம் ஆகியவைகள் மீது பட்டால் தங்கம் வெள்ளை நிறமாகிவிடும். ஆகையால் பக்த அன்பர்கள் ஒவ்வொருவரும் கவனமாக பார்த்துக் கொள்ளவும்.

மேலும் இரசமணி விநாயகர் விக்ரஹம் தங்களுக்கு வந்த பின் ஏற்படும் மாற்றங்கள், பலன்கள் அதனால் அடைந்த மகிழ்ச்சி, நிறைவேறிய காரியங்கள் குறித்து எங்களுக்கு தவறாமல் மறவாது எங்களுக்கு தபால் மூலம் தெரியப்படுத்துமாறு மிக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
உண்மையுள்ள

''இரசமணி'' M. மோகன்
114, அங்கையராஜா தெரு,
சாந்தி தியேட்டர் எதிர்புறம், இராஜபாளையம்.

விலை விபரம்

1	இரசமணி விநாயகர்	Rs. 601-00
2	இரசமணி முருகன்	Rs. 850-00
3	இரசமணி சிவலிங்கம்	Rs. 1000-00
4	இரசமணி விநாயகர்(தேருடன்)	Rs. 1301-00
5	இரசமணி முருகன்	Rs. 1600-00
6	இரசமணி சிவலிங்கம் (தேருடன்)	Rs. 1750-00
7	இரசமணி சிவலிங்கம் (பெரியது)	Rs. 4001-00
8	இரசமணி விநாயகர் பெரியது	Rs. 3501-00
9	இரசமணி முருகன் பெரியது	Rs. 3000-00
10	இரசமணி விநாயகர் பெரியது (தேருடன்)	Rs. 5001-00
11	இரசமணி முருகன் பெரியது (தேருடன்)	Rs. 5001-00
12	இரசமணி	Rs. 250-00
13	தியான இரசமணி	Rs. 450-00
14	இரசமணி ஸ்படிக மாலை (வெள்ளிகம்பி) 54	Rs. 1200-00
15	இரசமணி ஸ்படிக மாலை (வெள்ளிகம்பி) 108	Rs. 2100-00
16	இரசமணி நந்தி	Rs. 501 00

Koviloor Digital Library

உ

ஓம் மஹா கணபதே நமஹ:

இரசமணி விநாயகர் அபிஷேக முறையும் மருத்துவ குணங்களும் பலன்களும்

இரசமணி விநாயகரை வைத்து வழிபடும் பக்த அன்பர்கள் ஒவ்வொருவரும் செய்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேகம் செய்வது நல்லது.

மேலும் அபிஷேகம் செய்யும் பொழுது முதலில் ஜலம் கொண்டு நன்றாக கழுவி பின், தட்டில் வைத்து பாலாபிஷேகம் செய்யவும். பிறகு நாங்கள் கொடுத்துள்ள மஞ்சள் பொடியை சிறிது நீரில் கரைத்து அபிஷேகம் செய்யவும்.

அபிஷேகம் செய்த பாலையோ, மஞ்சள் நீரையோ சிறிது அருந்தி வர பல நோய்கள் குணமடையும்.

மேலும் நாங்கள் அபிஷேகத்திற்கு என்று மஞ்சள் பொடியுடன் மூலிகை சேர்த்து தயாரித்து எங்கள் கோவிலில் உள்ள விநாயகர் சிலைக்கு மஞ்சள் பொடியால் அபிஷேகம் செய்து அதை உங்களுக்கு வழங்குவதால் அதன் சக்தியும் பெறப்பட்டு, மூலிகை குணம் உள்ளத்தால் அதன் மகிமையால் பல நோய்கள் தீர்வதுடன் உடலில் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி கிடைக்கப் பெறும்.

இவ்வகை விஷேச அபிஷேக மஞ்சள் பொடியை நாங்களே பிரத்யோகமாக தயார் செய்து அதை பக்த அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் அனுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

மேலும் விஷேச அபிஷேக மஞ்சள் பொடி தேவைப்படுவர்கள் எங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.



இரசமணி விநாயகர்

அபிஷேக மூலிகை

மஞ்சள் பொடி

இப்படிக்கு,

"இரசமணி" M. மோகன்

இராஜபாளையம்.

போன் : 04563 - 320172


செல் : 98421 - 35662, 99428 07597

Koviloor Digital Library














இரசமணி விநாயகர்

RASAMANI VINAYAGAR

M. மோகன்,
114, அங்கையா ராஜா தெரு,
சாந்தி தியேட்டர் எதிர்புறம்,
இராஜபாளையம் - 626 117
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.
போன் : 04563 - 320172,
செல் : 98421 - 35662



M. Mohan,
114,Angaiah Raja St.,
Santhi Theatre Opp.
RAJAPALAYAM - 626 117
Virudhunagar Dist. TamilNadu.
Phone : 04563 - 320172,
Cell : 98421 - 35662

E-mail : rasamanivinayagar@yahoo.co.in,
www.rasamani.com
நேரில் வரவிரும்பும் பக்தர்கள் : காலை 10 மணிமுதல் 1 மணிவரை,
மாலை 4 மணி முதல் 8 மணி வரை அனுகவும்